**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**நான்காம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**மே, சூன் – 2019**

**A051 மொழிவரலாறு – 1**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. மூலமொழியின் வேறு பெயர்கள் யாவை?
2. பகாபதம் என்றால் என்ன?
3. பின் ஒட்டுச் சொல் என்றால் என்ன?
4. பேச்சொலிகள் எத்தனை பிரிவாக உள்ளன?
5. உலக ஒலி எழுத்து எதற்கு உதவுகிறது?
6. சோழர்கால கல்வெட்டுக்குச் சான்று தருக.
7. மொழி வரலாறு என்றால் என்ன?
8. தமிழில் கிடைத்துள்ள முதல் இலக்கண நூல் எது?
9. குகைக் கல்வெட்டுகளில் மொழியை எழுத பயன்படுத்திய எழுத்து வடிவம் யாது?
10. ஒலியனியல் என்றால் என்ன?
11. கிளவியாக்கம் என்ற தொடரின் பொருள் யாது?
12. இரண்டாம் குலோத்துங்கச் சோழன் அவையில் அமைச்சராகத் திகழ்ந்தவர் யார்?
13. ஒரு சொல்லை ஓர் எழுத்தாக எழுதும் முறைக்கும் பெயர் என்ன?
14. பாண்டிய மன்னர்களால் போற்றப் பெற்ற தமிழ் எழுத்து வடிவம் எது?
15. சக்கரவர்த்தினி – இதழை நடத்தியவர் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக. (5x3=15)**

1. மொழியின் இலக்கணம் யாது?
2. உடல் மொழி (Body Language) என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தருக.
3. மாற்றொலி என்றால் என்ன? சான்று தருக.
4. இடைச்சொல்லிற்குத் தொல்காப்பியர் கூறும் இலக்கணம் யாது?
5. வண்ணச் சினைச் சொல் என்றால் என்ன? சான்று தருக.
6. பல்லவர் காலத்தமிழை அறிய உதவும் சான்றுகள் யாவை?
7. இருபதாம் நூற்றாண்டில் தமிழ் மாற்றம் பெறுவதற்கான காலச் சூழல் யாது?
8. மணிப்பிரவாள நடை என்றால் என்ன?

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக. (3x15=45)**

1. (அ) தமிழ் எழுத்துகளின் வகைகள் குறித்து கட்டுரை வடிவில் விடை தருக.

(அல்லது)

(ஆ) பல்லவர் காலத் தமிழின் பெயரியல் அமைப்பில் ஏற்பட்ட சில மாற்றங்களைச் சான்றுகளுடன் விளக்குக.

2. (அ) நாயக்கர் காலத்தில் இலக்கணக் கூறுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) உருபனியல் குறித்து கட்டுரை வடிவில் விடை தருக.

3. (அ) மின்னணு ஊடகங்களான வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் ஆகியவற்றில் தமிழ் மொழிநடைக் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) புதிய உரை நடையின் தோற்றம் குறித்து எழுதுக.

***